ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,841 — 1959 අගෝස්තු 28 වැනි සිකුරාදා — 28.8.1959

11,841 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆவணி மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதனவிற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 714 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## துணைவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து சுளிபுரம் கிராமப்பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரித்த பிரகடனத்தால் திருத்தப்பெற்ற அப்பிரிவின் (3) ம் உட்பிரிவின் கீழ் உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5 ந் திகதி.

#### உபவிதிகள்

#### ஆயுள்வேத மருந்துச்சாலை

1. கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 43 (பி) பிரிவின்கீழ், சுளிபுரத்தில், சங்கத்தால் தாபிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்துச்சாலை, சங்கத்தால் தாபரிக்கப்பட்டு, 1941 ம் ஆண்டின் 17 ம் இலக்க சுதேச வைத்தியச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பெற்ற ஒரு சுதேச வைத்தியரின் பொறுப்பில் இருக்க வேண்டும்.

2. 1 ம் உபவிதியில் சொல்லப்பட்ட சுதேச வைத்தியர் அல்லது சங்கத்தால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் எவரும் சங்கம் அங்கீகாரம் அளிக்கின்ற மாதிரியிலும், முறையிலும் அந்த ஆயுள்வேத மருந்துச்சாலை விஷயமாக சங்கம் விதிக்கும் கணக்குப் புத்தகங்களையும் மற்றும் பதிவு ஏடுகளையும் எழுதிவைத்தல் வேண்டும்.

3. சங்கம் வருடந்தோறும் அந்த ஆயுள்வேத மருந்துச்சாலையின் பரிபாலனத்துக்கு வேண்டிய நிதிகளைப் பொதுநிதியிலிருந்து ஒதுக்கலாம். அவ்விதம் ஒதுக்குதற்கு சங்கத்தின் வருடாந்தர வரவுசெலவுத் திட்டத்திலாவது அல்லது சங்கத்தால் காலத்துக்குக்காலம் நிறைவேற்றப்படும் உபமானியத் திட்டங்களிலாவது நிதிவசதி செய்யவேண்டும்.

4. 5 ம் உபவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, அந்த ஆயுள்வேத மருந்துச்சாலையில் நோயாளிகளுக்கு, அதுவும் சுளிபுரம் கிராமப்பகுதியில் வசிப்பவர்களுக்கு மாத்திரம், இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

5. கொடுக்கும் மருந்துகள், மருந்துச்சரக்குகள் ஆகியவற்றின் செலவில் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்காக அந்த ஆயுள்வேத மருந்துச்சாலையில் சிகிச்சைபெறும் ஒவ்வொரு நோயாளியிடமுமிருந்தும் சங்கம் ஐம்பது சதத்தைக் கட்டணமாகப் பெறலாம். ஒரு நோயாளியிடம் வாங்கும் அத்தகைய அட்டணம் ஒவ்வொன்றுக்கும், தலைவரேனும் அவரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரேனும், சங்கத்தால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஒரு பத்திரத்தில், உடனே ஒரு பற்றுச்சீட்டுக் கொடுக்க வேண்டும்.

6. தலைவர், தமது உசிதப்படி, வறியவர் என்பதற்காக, எந்த நோயாளியையும், 5 ம் உபவிதியில் விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து தவிர்த்து விடலாம்.

7. அந்த ஆயுள்வேத மருந்துச்சாலையின் பரிபாலனத்துக்காக, நன்மைவிரும்பி ஒருவரிடமிருந்து கிடைக்கும் நன்கொடைத் தொகை எதுவும் மருந்துச்சாலையின் செலவுகளைச் செய்தற்கு உபயோகிக்கப்பட வேண்டும்.

8. டிசம்பர் 31 ல் முடிவுறும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், தலைவர், அந்த ஆயுள்வேத மருந்துச்சாலையின் அவ்வருடத்து வரவுசெலவுகளைக் காட்டும் அறிக்கை ஒன்றைச் சித்தஞ் செய்விக்க வேண்டும்.

9. இந்த உபவிதிகளில்—

"ஆயுள்வேத மருந்துச்சாலை" என்பது சங்கம் தாபித்துப் பரிபாலிக்கும் ஆயுள்வேத மருந்துச்சாலை எனப் பொருள்படும்.

"தலைவர்" என்பது கிராமச்சங்கத் தலைவர் எனப் பொருள்படும்.

"சங்கம்" என்பது யாழ்ப்பாணம் மாவட்டத்து சுளிபுரம் கிராமப்பகுதியின் கிராமச்சங்கம் எனப் பொருள்படும்.

---

L.G.D.—GC. 14/49.

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி புத்தளம் மாவட்டத்தில் உள்ள கற்பிட்டிக் கிராமப்பகுதியின் கிராமச்சங்கம் உண்டாக்கியதும் 1947 ம் ஆண்டு செப்டம்பர் மாதம், 24 ம் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீதுவைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான உபவிதி.

வீ. சீ. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ந் திகதி.

#### உபவிதி

#### தீங்கான அபாயகரமான வியாபாரங்கள்

(1) (அ) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும்.

(அ) பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்துவைத்தல் ;

(ஆ) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின் பொருட்டு அழுகிக்கெடும் உணவுப் பொருட்கள் சேகரித்துவைத்தல் ;

(இ) செயற்கை உரம் சேகரித்துவைத்தல் ;

(ஈ) சவர்க்காரம் செய்தல் ;

(உ) சுருட்டு சுற்றுதல் ;

(ஊ) பலகை பாடம் பண்ணுதல் ;

(எ) தும்பு செய்தல் அல்லது சேகரித்துவைத்தல் ;

(ஏ) மூன்று மூடைகளுக்கதிகமாக தோல் எலும்பு அல்லது செயற்கை உரம் சேகரித்துவைத்தல் ;

(ஐ) புகையிலை சேகரித்துவைத்தல் ;

(ஒ) கருவாடு பாடம்பண்ணுதல் ;

(ஓ) மீனுக்கு ஐஸ்போடுதல்.

(ஆ) கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயகரமான வியாபாரங்களாகக் கருதப்படும்.

(அ) குழி வெட்டி முதிரைக்கல் தோண்டுதல் ;

(ஆ) வைக்கோல் சேகரித்துவைத்தல் ;

(இ) காற்றடைத்த பானங்கள் செய்தல் ;

(ஈ) புகையிலை பாடம்பண்ணலும், உலர்த்துதலும் ;

(உ) மண்ணெண்ணெய்க் கடை வைத்தல் ;

(ஊ) ஆபரணங்கள் செய்தல் ;

(எ) எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சார சக்தியினால் இயங்கும் இயந்திரம் பாவிக்கப்படும் வியாபாரம் எதுவும் ;

(ஏ) கொப்பரு செய்தல் ;

(ஐ) கொப்பரு சேகரித்துவைத்தல் ;

(ஒ) கபூக்கல், மக்கிக்கல், அல்லது கருங்கல் தோண்டி எடுத்தல் ;

(ஓ) சுண்ணும்பு சுடுதல் ;

(ஔ) மூன்று மூடைகளுக்கதிகமாக சுண்ணும்பு சேகரித்துவைத்தல் ;

(க) பைசிக்கிள் செப்பனிடும் தொழிற்களரி வைத்தல் ;

(கா) கொல்லுலை வைத்தல் ;

(கி) தச்சுத் தொழிற்களரி வைத்தல் ;

(கீ) குழிதோண்டி சிப்பி எடுத்தல்.

(இ) கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான, அபாயமான வியாபாரங்களாகக்கருதப்படும்.

(அ) மின்குளங்களில் மின்சக்தி நிரப்புதல் ;

(ஆ) கோடா செய்தல் ;

(இ) செங்கல் அல்லது ஓடு சுடுதல் ;

(ஈ) கரிக்காக தேங்காய்ச்சிரட்டை சுடுதல்.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 16 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1959 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 18 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 12 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு ஆவணி (ஒகஸ்ற்) மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.